1975 அக்டோபர் 27]

டிராக்டர்கள் வாங்கக் கடன் வசதி

*79 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நிலவள வங்கிகள் மூலமாக டிராக்டர்கள் வாங்க விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்கென 1974-75-க்கு ஒதுக்கப் பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(இ) எத்தனை பேர்களுக்கு டிராக்டர்கள் வாங்க கடன் அளிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) 1974-75-ம் ஆண்டுக்கு ரூ. 229.59 லட்சம்.

(இ) 1974-75-ம் ஆண்டில் 540 விவசாயிகள்.

திரு. கே. எ. வகாப் : விவசாயிகள் தங்களுடைய விவசாயத் தேவைக்கு சில குறிப்பிட்ட டிராக்டர்களையே—பெர்கூசான் போன்றவற்றையே கேட்கிற காரணத்தினால் அரசாங்கமே அவர்கள் விரும்புகிற டிராக்டரை வாங்கிக்கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : இந்த ஆண்டு 'ஐடா' வில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங் களில், எந்தெந்த கம்பெனி எந்தெந்த டிராக்டர்களைச் சப்ளை செய்ய முடியும் என்கிற விவரங்கள் பெறப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் எந்தெந்த டிராக்டர்கள் எந்தெந்தப் பகுதிக்குத் தேவை என்று கோருகிருர்களோ, அது பரிசீலிக்கப்பட்டு தேவையானவற்றை அங் கங்கே கொடுப்பார்கள்.

திரு. கு. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, நிலவள வங்கிகள் மூலமாகத் தனிப்பட்ட முறையிலே டிராக்டர்கள் வாங்கியவர்கள் வாடகைக்கு விடும்பொழுது அதிகப்படியான வாடகையை வசூலிக் கிருர்கள். இவ்வளவுதான் ஒரு எக்கருக்கு வாடகை வசூலிக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதற்கு வேறு கேள்வி போடவும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இப்படி லேண்ட் டெவலெப் மெண்ட் மூலமாக டிராக்டர்கள் வாங்குவதற்குக் கடன் கொடுக்கும் பொழுது விவசாயிகள் எந்த டிராக்டரை வாங்க வேண்டுமென்று

கேட்கிறார்களோ அந்த டிராக்டரை வாங்குவதற்கு அனுமதி தருகிறார்களா? அல்லது டெவலப்மெண்ட் பேங்க் இதைத்தான் வாங்க வேண்டுமென்று சொல்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதைத்தான் வாங்க வேண்டுமென்று சொல்லவில்லை, விவசாயிகள் எதைக் கேட்கிறார்களோ அதைத் தருகிறார்கள்.

திரு. மு. சண்முகம்: தலைவரவர்களே, விவசாயிகளுக்கு டிராக்டர்கள் கடன் மூலமாக வழங்க அனுமதிக்கப்பட்டு, உலக வங்கி வெளிநாடுகளில் 1,500 டிராக்டர்களுக்கு மேல் தமிழ் நாட்டிற்கு வழங்க இருந்தது முழுவதும் அனுமதிக்கப்பட்டு, வழங்கப்பட்டுவிட்டதா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அதைப்பற்றி பேசியாகிவிட்டது. 1,500 டிராக்டர்கள் வரையிலும் இந்த ஆண்டுக்கு—1975-76—ஆம் ஆண்டுக்கு—கொடுக்கப்படுவதாகப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றது. அநேகமாக இந்த மாத இறுதிக்குள் ஒப்பந்தமாகிவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சங்கராபுரம் ஒன்றியம் பள்ளிக் கட்டடங்கள்

* 80 வினா—**திரு. ந. நாச்சியப்பன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மணலூர், மேல் சிறுவலூர் ஊர்களில் பள்ளிகளுக்குச் கட்டடம் கட்டும் பணி இன்னும் பூர்த்தியாகவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மணலூரில் பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. மேல் சிறுவலூரில் 31—3—1976-க்குள் பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) சிமெண்ட் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தடங்கலே மேல் சிறுவலூரில் பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்க தாமதத்திற்குக் காரணம்.